பக்கங்கள்: 10 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 13 வியாழக்கிழமை 26.03.2020 | கதிர் 09

## மிருசுவிலில் 8 தமிழர்கள் படுகொலை;

# கொலையாளியான படை அதிகாரி விடுதலை!



கொழும்பு, மார்ச் 26

மிருசுவிலில் எட்டு தமிழர்களைப் படுகொலை செய்த குற்றத்துக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரி சுனில் ரத்நாயக்க பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் இராணுவ ஸ்ராவ் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பொதுமன்னிப்பின் கீழ் இன்று 9

## கூட்டமைப்பு கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

மிருசுவில் வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டுத் தண்டிக்கப்பட்ட சார்ஜண்ட் சுனில் ரத்நாயக்க ஜனாதிபதியின் மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட 9

## 4 வயது சிறுமி தொற்றுக்கு உள்ளானாரா?

**வைத்தியசாலையில் அனுமதி**

தாவடிப் பகுதியில் இருந்து 4 வயதுச் சிறுமி ஒருவர் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் 9

## முகக்கவசம் அணியாதது குற்றமல்ல!

**சுகாதார அமைச்சு விளக்கம்**

கொழும்பு, மார்ச் 26

முகக்கவசம் அணியாததை ஒரு குற்றமாகக் கருதவேண்டாமென பதில் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க.

பொதுமக்கள் 9

# தொடர்ச்சியாக முடக்கப்படும் யாழ். குடாநாடு







- ★ ஊரடங்கு உத்தரவு மறு அறிவித்தல் வரை நீடிப்பு
- ★ தொற்றுக்குள்ளானோர் அதிகரிக்கலாம் என சந்தேகம்
- ★ அவதானத்துடன் இருக்குமாறு மக்களுக்கு எச்சரிக்கை

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 26

கொரோனா தொற்று மேலும் அதிகரிக்கலாம் என்ற அபாயம் – அச்சம் காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டைக் காலவரையறையின்றி முடக்குவதற்கு அரசு தீர்மானித்திருக்கின்றது. இதனால் வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் மட்டும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டிருக்கின்றது. 9

## தனிநபர் கடன் அறவீடு ஏப்ரல் 30 வரை நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 26

அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களின் சம்பளத்தை ஆதாரமாக வைத்து வழங்கப்பட்ட தனிநபர் கடனுக்கான தவணைக் கட்டணம் ஏப்ரல் 30ஆம் திகதிவரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சரவை இணைப் 9

## கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அடுத்த இரு வாரங்களும் அதிகரிக்கும் அபாயம்

**அரசாங்கத் தரப்பில் இருந்து முன்னாயத்த எச்சரிக்கை**

கொழும்பு, மார்ச் 26

அடுத்த இரண்டு வாரகாலத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்ற அச்சம் நிலவுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதற்காக மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் முகாம்கள் மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளன எனவும் அரசாங்கம் 9

## புதிதாக எவருமே கொரோனாவுக்கு உள்ளாகவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 26

கொரோனோ தொற்று சந்தேகத்தில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு மேற்கொண்ட பரிசோதனைகளில் எவரும் தொற்றுக்கு உள்ளாகவில்லை என 9

## நாடாளுமன்றத் தேர்தல் 3 மாதங்கள் தாமதிக்கும்?

கொழும்பு, மார்ச் 26

நாடாளுமன்றத் தேர்தல் மூன்று மாதங்களுக்குப் பிற்போடப்படும் சாத்தியம் காணப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டில் தற்போது காணப்படும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி 9

## சுவிற்சர்லாந்தில் கொரோனாவுக்கு தமிழரும் மரணம்!

பேர்ன், மார்ச் 26

சுவிட்சர்லாந்தில் தமிழர் ஒருவர் கொரோனாவினால் உயிரிழந்துள்ளார் என அந்தப் பிரதேசவாசி ஒருவர் தெரிவித்துள்ளார். புங்குடுதீவைச் சேர்ந்த 61 வயது நிரம்பிய லோகநாதன் என்பவரே 9

# வழமை போல களத்தில் பாலித தேவப்பெரும!





ஊரடங்குச் சட்டத்தினால் பல பகுதிகளில் மக்களின் அன்றாட வாழ்வு பாதிக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் இந்நிலையை சமாளிப்பதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

இந்தநிலையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவப்பெரும தமது பகுதிகளில் தவிக்கும் பொது மக்களுக்காக சமைத்த உணவுகளை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளமையுடன், தானே களத்தில் இறங்கி சமைக்கவும் செய்துள்ளார்.

கடந்த காலத்தில் இலங்கையில் ஏற்பட்டிருந்த வெள்ள அனர்த்தம் உட்பட பல அவசர கால நிலைமைகளின் போதும் கூட இவர் களத்தில் இறங்கி வேலை செய்தவர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

மக்களின் தேவையறிந்து சேவை செய்யும் மனிதர்களை சமூக வலைத்தளங்களில் உள்ளவர்கள் பாராட்டி வருகின்றனர்.

# அவசர தேவையின்றி யாரும் வெளியில் நடமாடவேண்டாம்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் கோரிக்கை



கொழும்பு, மார்ச் 26

ஊரடங்கு அமுலில் உள்ள நேரத்தில் மிக அவசர தேவையின்றி வெளியில் செல்வதற்கு அனுமதி இல்லை எனப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு அமுலில் உள்ள நேரத்தில் மிக அவசர தேவையின்றி வெளியில் செல்வதற்கு அனுமதி இல்லை என்றும், ஒரு பிரதேசத்திருந்து இன்னொரு பிரதேசத்துக்குச் செல்வதற்கு அனுமதி இல்லை எனவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நேரத்தில் ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்துக்குச் செல்வதற்கு அனுமதி கிடைக்கப் போவதில்லை.

அனுமதி அளிக்கப்பட்ட சுகாதாரத் தேவைகள், மருத்துவத் தேவைகள், அத்தியாவசியத் தேவைகளைக் கொண்ட வாகனங்கள் தவிர்ந்த வேறு வாகனங்கள் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்போவதில்லை.

அவ்வாறு அனுமதியுடன் செல்லும் வாகனங்களும் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றிச் செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படும்.

வேறு எவருக்கும் பயணம் செல்வதற்கு அனுமதி இல்லை.

ஊடங்குச் சட்டம் நீக்கப்படும் சந்தர்ப்பத்தில் மக்கள் சந்தைக்கு, அல்லது அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களுக்கு மட்டும் செல்லவேண்டுமே தவிர வேறு தேவைகளுக்காக வீட்டிலிருந்து வெளியேறவேண்டாம் என கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (ஐ)

# யாழ். தாவடி மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 26

தனிமைப்படுத்தப்பட்டுள்ள தாவடிக் கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

தாவடிக் கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அங்கு வதியும் 260 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இராணுவத்தினரின் உதவியுடன் இந்த நிவாரணப் பொருட்கள் கைளிக்கப்பட்டதுடன், முகக் கவசங்களும் வழங்கப்பட்டன.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இனங்காணப்பட்ட கொரோனா நோயாளி தாவடிக் கிராமத்தைச் சேர்ந்தவர்.

இதனையடுத்தே அந்தக் கிராமம் தனிமைப்படுத்தப்பட்டு, இராணுவத்தினரால் கண்காணிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ - 07)

# யாழ். மாநகர எல்லைக்குள் கழிவகற்றும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் கழிவகற்றும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியைச் சுத்தமாக்கும் பணிகளும், கழிவகற்றல் பணிகளும் இன்று முதல் ஊரடங்கு நேரத்திலும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இன்று காலை 7 மணி முதல் கழிவகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

வட்டாரங்களில் வழமைபோன்று கழிவகற்றும் வாகனங்கள் வருகை தரும்போது, பொதுமக்கள் தமது வீடுகளில் உள்ள கழிவுகளை சுகாதார ஊழியர்களிடம் கையளிக்க முடியும் என யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தெரிவித்தார். (ஐ -07)







# யாழ்ப்பாணத்தை ஐந்து வலயங்களாக்கி தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுங்கள்

## சைவ மகா சபை இப்படி ஆலோசனை

யாழ். மாவட்டத்தை ஐந்து வலயங்களாகப் பிரித்து ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என அகில இலங்கை சைவ மகா சபை ஆலோசனை முன்வைத்துள்ளது.

கடந்த திங்களன்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட போது மக்கள் நடந்துகொண்ட விதத்தை தக்க பாடமாக எடுத்துக்கொண்டு இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்குமாறு சைவ மகா சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சைவ மகா சபை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

யாழ். மாவட்டத்தை வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் மற்றும் யாழ்.மாநகரம் என ஐந்து வலயங்களாக பிரித்து ஐந்து வலயங்களுக்கும் தனித்தனியான ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

இக்காலப்பகுதியில் ஒரு பிரதேசத்தில் இருந்து இன்னொரு பிரதேசத்திற்கு அத்தியாவசிய பணியாளர்களும் மருத்துவர்களும் செல்வதற்கு எனப் போக்குவரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியை வழங்கவேண்டும்.

யாழ். மாநகரத்திற்கு வீட்டுக்கு வீடு பொருள்களை விநியோகிக்கும் நடைமுறையை கொண்டு வரலாம். ஊரடங்கு ஒரு வாரத்திற்கு தொடரப்பட வேண்டும்.

ஊரடங்கு வேளையில் உரிய அனுமதிகளுடன் நகர்புற களஞ்சியங்களிலிருந்து கிராமங்கள் மற்றும் பிரதேச ரீதியான கடைகளுக்கு பொருள்கள் நகர்த்தப்பட்டு மிகக் குறைந்த எண்ணிக்கையானோரின் அசைவியகத்துடன் பொருள்கள் விநியோகிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான நடைமுறையை பின்பற்றினால் கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து விரைவான – முழுமையான – பாதுகாப்பு பெற முடியும். இதைச் செயற்படுத்துமாறு அரச தரப்பையும் அதிகாரிகளையும் வலியுறுத்துகின்றோம். – என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## நாடாளுமன்றத்தை மீளவும் கூட்ட வேண்டிய கட்டாயம்

நாட்டின் அரசியலின் செல்நெறியைத் தீர்மானிக்கும் பிரதான அங்கங்களில் ஒன்றாக கொரோனா வைரஸ் பேரரக்கனும் மாறி வருகின்றது என்பது களநிலை யதார்த்தம்.

சர்வதேசிய ரீதியிலும், தேசிய மட்டத்திலும் கொரோனா வைரஸ் செலுத்தி வரும் தாக்கம் – பாதிப்பு – இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் இப்போதைக்கு சாத்தியமானது என்று நம்பக்கூடிய அல்லது எதிர்வு கூறக் கூடிய நிலைமையைத் தருவதாக இல்லை. இதுதான் உண்மை நிலைவரம்.

நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான ஜனாதிபதியின் அறிவிப்பின் பிரகாரம், எதிர்வரும் ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னர் பொதுத் தேல்தல் நடத்தப்பட்டு, அந்தத் திகதிக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் கூடவேண்டும். அப்படித்தான் அரசமைப்பு ஏற்பாடுகள் வலியுறுத்துகின்றன.

அதேசமயம் ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்துவதற்கு திகதியிடப்பட்ட பொதுத் தேர்தலை தேர்தல் ஆணையரும் ஒத்திவைத்து விட்டார். அரசமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் அறிவிக்கப்பட்ட தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால், ஒத்திவைக்கப்பட்ட தினத்திலிருந்து 14 வேலை நாள்களின் பின்னரே புதிய தேர்தலை நடத்த முடியும். அதன்படி பார்த்தால் மே 19 ஆம் திகதிக்குப் பிறகுதான் தேர்தல் ஆணையம் தேர்தலை நடத்த முடியும்.

நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைத்த ஜனாதிபதியின் உத்தரவுப்படி, அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைய புதிய நாடாளுமன்றம் ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னர் கூட வேண்டும்.

இந்த இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்தால் –

ஒத்திவைக்கப்பட்ட தேர்தல் மே 19ஆம் திகதிக்குப் பின்னர், ஜூன் 02 ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூடத் தக்க வகையில் அதற்கு முன்பதாக, நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

கொரோனா வைரஸ் பிரச்சினைக்கு முழுமையாகத் தீர்வு கண்டு, அதற்குப் பின்னர் தேர்தலுக்கான பிரசாரங்களை நடத்தி, இந்தத் திகதிக்குள் பொதுத் தேர்தலை நடத்துவது என்பது சாத்தியமற்றதாகவே தோன்றுகின்றது.

எனவே, அறிவிக்கப்பட்ட பொதுத் தேர்தலை அதற்குரிய கால எல்லைக்குள் நடத்த முடியாத சிக்கல் – அரசமைப்பு நெருக்கடி – ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்று என்பதே பெரும்பாலும் இன்றைய நிலைமையாகும்.

இந்த சிக்கல் நிலையை எப்படித் தாண்டுவது?

அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கின்றது. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளவும் கூட்டி, இந்த அரசமைப்பு நெருக்கடிக்குள் இருந்து வெளியே வருவதற்கான சட்டங்களை – ஒழுங்கு விதிகளை – அந்த நாடாளுமன்ற நடவடிக்கைகள் மூலம் ஏற்படுத்திக் கொள்வது தான்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் சட்டரீதியான பதவிக் காலம் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை இருந்தது. எனினும் அது முற்கூட்டியே கலைக்கப்பட்டுவிட்டது.

இன்றைய நிலையில் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை ஜனாதிபதி ஓர் அறிவித்தல் மூலம் அதனை மீளக் கூட வைத்து இயக்கலாம். அதற்கு சட்டத்தில் இடமுண்டு.

அறிவிக்கப்பட்ட பொதுத் தேர்தலை கொரோனா நெருக்கடி காரணமாக ஒத்தி வைத்த நிலையில், அதிலிருந்து மீண்டு அத்தேர்தலை நடத்துவதற்கு கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவது தவிர்க்க முடியாத கட்டாயம் என்பது புலனாகி வருகின்றது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் உண்மையில் விநோதமான ஒன்று. வரலாற்றில் அது வித்தியாசமான நாடாளுமன்றமாக அவதானிக்கப்படும்.

இப்போது அந்த நாடாளுமன்றம் மீளக் கூட்டப்படுவதாக அறிவிக்கப்பட்டால், ஒன்றல்ல, இரண்டு தடவைகள், கலைக்கப்பட்ட பின்னர் திரும்பவும் உயிர்ப்பித்த நாடாளுமன்றம் என்ற பெருமையை அது பெறும்.

2018 பிற்பகுதியிலும் அது கலைக்கப்பட்டதாக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் அறிவிக்கப்பட்டு, புதிய பொதுத் தேர்தலுக்கான திகதியும் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில், அந்த அறிவிப்பு சட்ட ரீதியாக செல்லுபடியற்றது என உயர்நீதிமன்றம் ஏகமனதாக வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், அந்த நாடாளுமன்றம் மீளவும் உயிர்ப்பித்து கொண்டது என்பது தெரிந்ததே.

ஆக, இரண்டு தடவைகள் மரணச் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர், திரும்பவும் உயிர் வாழும் சான்றிதழை ஈட்டிக் கொண்ட பெருமை இந்த நாடாளுமன்றத்துக்கே உரியதாகும் சூழல் ஏற்பட்டு வருகின்றது.

அப்படி அறிவிக்கப்பட்ட தேர்தலை நடத்த முடியாமல் அதைப் பின்போட்ட சூழலில், புதிதாகத் தேர்தலுக்கான அறிவித்தல் ஆரம்பத்தில் இருந்து வருமானால், வேட்பு மனுக்கள் கூட புதிதாகத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற சட்ட ஏற்பாடுகளும் அதற்குள் சேர்க்கப்பட அதிகம் வாய்ப்புகள் உண்டு. அது பற்றிய சாதக, பாதக சட்ட நிலைமைகளை பிறிதொரு தினத்தில் இப்பத்தியில் பார்ப்போம்.

# மன்னாரில் பொருள்கள் விநியோகம்

நாளைய தினம் வெள்ளிக்கிழமை வட மாகாணத்தின் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஊரடங்கு சட்டம் காலை 6 மணி தொடக்கம் மதியம் 2 மணி வரை தளர்த்தப்படவுள்ளது. இந்த நிலையில் மன்னார் மாவட்ட மக்களுக்கான அத்தியாவசிய பொருட்கள் இன்றைய தினம் மொத்த வியாபாரிகளுக்கும் அதே நேரத்தில் கிராம மட்டத்தில் இயங்கும் சிறிய வியாபாரிகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ள விசேட பாஸ் அனுமதியுள்ள விநியோகஸ்தர்கள் மூலம் மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலகங்களையும் சேர்ந்த மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கு அத்தியாவசிய பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் நாளைய தினம் வெள்ளிக்கிழமை ஏற்படுகின்றன சன நெரிசலை குறைப்பதற்காகவும் நபர்களுக்கான இடை வெளியை நடைமுறைப் படுத்துவதற்காகவும் பாதுகாப்புக்காகவும் முப்படையினரால் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மீனவர்கள் மீன் பிடி நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்ற அரச அறிவிப்புக்கு அமைவாக மீனவர்கள் கடற்தொழிலுக்குச் சென்றுள்ளனர்.

அதே நேரத்தில் பிடிபடும் மீன்களைச் சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தினால் பொலிஸாரின் உதவியுடன் செயல் படுத்தப்பட்டுள்ளது

### முகக்கவசங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால்

# கொரோனா நோய்க் கண்டுபிடிப்புக்கான சோதனைகளை இடை நிறுத்தும் அபாயம்

கொழும்பு,மார்ச்26

கொரோனா வைரஸ் பாதிப்பு தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசேட வைத்திய பரிசோதனைகளை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுண்ணுயிரியலாளர் ஒருவரின் கூற்றுப்படி, நோயாளிகளின் மாதிரிகளை பரிசோதிக்கும் வைத்தியர்களுக்கு முகக் கவசங்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்திய பரிசோதனைகளுக்கு பயன்படுத்தப்படும் ஹி95 முகக்கவசங்களை சாதாரண பொதுமக்களும் பயன்படுத்துவதால், இதற்கான பற்றாக்குறை நிலவுவதாக பேராசிரியர் நீலிகா மளவிகே தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள காணொளியில், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் நீலிகா மளவிகே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஹி95 முகக்கவசத்திற்கு தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில், கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறியும் சோதனைகளை நிறுத்த வேண்டியேற்படும் என எச்சரித்துள்ள அவர், இந்த விடயமானது நாட்டின் அனைத்து மக்களுக்கும் பாதிப்பினை ஏற்படுத்தும் விவகாரமாக மாறும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதுபோன்ற சூழ்நிலையில் தேவையற்ற ஹி95 மற்றும் பிற முகக்கவசங்களை பயன்படுத்த வேண்டாம் என இலங்கையர்களை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் நிலவும் கொரோனா அச்ச சூழ்நிலை காரணமாக, கடைகள், வங்கிகள் மற்றும் சில அரச நிறுவனங்கள் முககவசம் இல்லாமல் மக்களை தமது வளாகத்திற்குள் நுழைகின்றமையைத் தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க சமீபத்தில் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தார். எனினும் இது அவசியமற்ற ஒரு நடைமுறை எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

மேலும், முகக்கவசத்தை அணிவது அவரவர் விருப்பம் எனவும், குறித்த முக்கவசத்தால் அணிந்திருப்பவருக்கு பாதுகாப்பு என்பதை விட, அவருக்கு அருகில் இருப்பவருக்கு நோய் பரவாமல் தடுப்பதற்கு உதவும் எனவும், ஒரு நபருக்கு காய்ச்சல் அல்லது நோய் பரவும் அபாயம் இருந்தால் மாத்திரமே முகக்கவசத்தை அணிவது சிறந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அத்தியாவசியப் பொருள்களை அதிக விலைக்கு விற்ற இணையத்தள சில்லறை விற்பனை நிறுவனம் சிக்கியது



கொழும்பு, மார்ச் 26

கொழும்பில் பிரபலமான இணையத்தள சில்லறை விற்பனை நிறுவனமான கப்ரூகா நிறுவனம் அதிக விலைக்குப் பொருள்களை விற்றமை தொடர்பில் கையும் மெய்யுமாக சிக்கியுள்ளது.

இணையத்தளம் மூலமாக சில்லறை விற்பனை பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனம் கப்ரூகா. இணையத்தளம் மூலம் பொருள்களை முன் பதிவு செய்தால், வீட்டுக்கு அவற்றை வழங்குவார்கள்.

ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளதை பயன்படுத்தி பொருள்களின் விலையை உயர்த்தி, இந்த நிறுவனம் பகல் கொள்ளையடிப்பதா கவும் நுகர்வோர் அதிகார சபையிடம் பலர் முறையிட்டனர்.

இதன்படி, நேற்று நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் இந்த நிறுவனத்திற்குள் அதிரடியாக பாய்ந்தனர்.

அங்கு நடத்தப்பட்ட சோதனையில் பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்தமை தெரிய வந்ததாம். மீன் ரின் ரூ.550/=, பெரிய வெங்காயம் ரூ.500/=, பருப்பு ஒரு கிலோ ரூ.180/=, மா ரூ.150/= இற்கு விற்பனை செய்தமை தெரிய வந்ததாகக் கூறப்பட்டது.

அதிக விலை அறவிட்ட வாடிக்கையாளர்களிடம் உடனடியாகப் பணத்தை மீள கையளிக்க உத்தரவிட்ட அதிகாரிகள், நிறுவனத்தின் மீது வழக்கும் தாக்கல் செய்யவுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியாவில் ஏப்ரல், மேயில் கொரோனா உச்சம் பெறும்!

## இந்தியா முழுவதும் 25 லட்சம் பேர் பாதிக்கப்படுவர் என்கிறது புதிய கணிப்பு

புதுடில்லி, மார்ச் 26

இந்தியாவில் 25 லட்சம் பேர் வரையிலானோருக்கு கொரோனா தாக்கும் வாய்ப்புள்ளது என்று ஒரு கணிப்புத் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கோரோனா நோய் தாக்குதல் எப்படி இருக்கும் என்று நோய் இயக்கம் பொருளாதார கொள்கை என்ற அமைப்பு அமெரிக்காவின் ஜாம்ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பட்டியல் ஒன்றை தயாரித்து உள்ளது.

அதாவது இப்போது ஒவ்வொரு மாநிலத்தில் உள்ள மக்கள் தொகை, ஆரம்ப கட்டத்தில் நோய் தாக்கியவர்கள் எண்ணிக்கை போன்ற விவரங்களை கணக்கிட்டு அதன் அடிப்படையில் புள்ளி விவரம் முறையில் இந்த பட்டியலை உருவாக்கி இருக்கிறார்கள்.

அதில், வருகிற ஏப்ரல் மற்றும் மே மாதத்தில் நோய் தாக்குதல் உச்சநிலையை அடையும் என்று கூறியிருக்கிறார்கள். 3 கோடியே 90 லட்சம் மக்கள் கொண்ட தெலுங்கானாவில் 39 பேருக்கும், 12 கோடியே 60 லட்சம் மக்கள் தொகை கொண்ட மகாராஷ்டிராவில் 107 பேருக்கும், 8 கோடியே 10 லட்சம் மக்கள் தொகை கொண்ட தமிழ்நாட்டில் 18 பேருக்கும் நோய் தாக்கி உள்ளது.

இதேபோல ஒவ்வொரு மாநிலத்திலும் தாக்கியுள்ள புள்ளி விவரங்கள் அடிப்படையில் இந்த கணக்கீட்டை உருவாக்கி உள்ளனர்.

இதன்படி நாடு முழுவதும் 12 லட்சத்தில் இருந்து 25 லட்சம் பேர் வரை நோய் தாக்குதலுக்கு ஆளாக வாய்ப்பு இருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை 60 ஆயிரம் பேர் வரை நோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளுக்குச் செல்லும் நிலை ஏற்படலாம். மே மாதம் இந்த நோய் தாக்குதல் உச்சத்தில் இருக்கும். நிலைமை மோசமானால் 1 லட்சம் பேர் வரை அப்போது பாதிக்கப்படக்கூடும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மக்கள் வெளியே நடமாடுவதை குறைத்துக் கொண்டால் நோய் தாக்குதல் 75 சதவீதம் வரை குறைவதற்கும் வாய்ப்பு இருப்பதாக கூறியுள்ளனர்.

மக்கள் வெளியே நடமாடுவதை முற்றிலும் தவிர்த்துவிடவேண்டும். ஒருவருக்கு ஒருவர் நேரடித் தொடர்பைத் துண்டித்தாலேயே நோய் பரவுதல் பெரும்பாலும் நின்றுவிடும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நோய் தாக்கம் தொடர்பாக விரிவான அறிக்கையை அந்த அமைப்பிடம் இருந்து கேட்டிருப்பதாக சுகாதாரத்துறை செயலாளர் பீலா ராஜேஷ் கூறியிருக்கிறார்.



## சமூக விலகலுக்கான முன்மாதிரிச் சந்தை

கொரோனா அச்சுறுத்தலின் மத்தியில் சமூக விலகலைப் பேணுவதற்காக இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் உள்ள சந்தை ஒன்றில் செய்யப்பட்ட ஏற்பாடுகள் முன்மாதிரியானவையாகப் பாராட்டுப் பெற்றுள்ளன.

ஆந்திர காய்கறிச் சந்தையில் வரையப்பட்ட சதுரங்கள் வாடிக்கையாளர்களுக்கு இடையேயான விலகலை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளன.

விஜயநகரம் மாவட்டத்தில் உள்ள பாபிலி நகரச் சந்தையில் காய்கறி வாங்க வேண்டுமென்றால் ஒவ்வொருவரும் இரண்டு மீட்டர் தள்ளி நின்றுதான் வாங்க வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு பாபிலி நகர சந்தை நிர்வாகிகள் ஒரு நூதன முறையைக்கையாண்டுள்ளார்கள். அதன் மூலம் 2 மீட்டர் சரியான இடைவெளி விட்டு ஆங்காங்கே சதுரங்களை வரைந்திருக்கிறார்கள். காய்கறிக் கடையை நோக்கி வந்த வாடிக்கையாளர் தங்கள் முறை வரும் வரை அந்த சதுரத்திலேயே நின்று காத்திருக்க வேண்டும்.

## 52 பேருக்கு கொரோனாவை பரப்பிய முஸ்லிம் மதகுரு!

மகாராஷ்டிர மாநிலம் மும்பையைச் சேர்ந்த முஸ்லிம் மதகுரு ஒருவர் தனக்கு கரோனா இருப்பது தெரியாமல் 52 பேருக்கு அதனைப் பரப்பியுள்ளார்.

தனக்குத் தொற்று ஏற்பட்ட பின்னர் பிலிப்பைன்ஸலிருந்து வந்த பயணிகளுடனும், மும்பை வாசிகளிடமும் அவர் பழகினார். இதனால் தற்போது 52 பேருக்கு கரோனா தொற்று இருப்பது அறிந்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

மதகுருவுக்கு கரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டது. அவரின் மனைவி, மகள், மகன் ஆகியோரின் ரத்த மாதிரிகளும் எடுக்கப்பட்டு சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நவி மும்பையில் உள்ள வாஷி பகுதியில் உள்ள மிகப்பெரிய மசூதிக்கு பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த பயணிகள் சிலர் வந்தனர். அங்குள்ள தலைமை மதகுருவுடன் பேசி, மதரீதியான செயல்பாடுகளில் ஈடுபட்டனர். அப்போதே அந்த மதகுருவுக்கு கரோனா இருந்துள்ளது. ஆனால், அது தெரியாமல் அவர் அனைவருடனும் பழகி வந்தார்.

சமீபத்தில் பிலிப்பைன்ஸ் பயணிகளுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டு சிகிச்சைக்கு வந்தபோதுதான் அவர்களுக்கு கரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதில் ஒரு முதியவர் கரோனாவிலிருந்து குணமடைந்த போதிலும், சிறுநீரகக் கோளாறு இருந்ததால், இரு நாட்களுக்கு முன் மும்பை கஸ்தூரிபா மருத்துவமனையில் உயிரிழந்தார்

மதகுருவுக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கரோனா வைரஸ் தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டது, அவருடன் நெருக்கமாகப் பழகிய 53 பேர் அடையாளம் காணப்பட்டு பரிசோதிக்கப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் கரோனா நோய் வந்ததற்கான அறிகுறிகள் இருந்தன. இதனால், பிலிப்பைன்ஸ் பயணிகள் உள்பட 53 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் மசூதியைச் சுற்றியுள்ள 1,200 வீடுகளும் கரோனா சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, கிருமிநாசினி மூலம் சுத்தப்படுத்தப்பட்டு வருகிறது.

## நெடுஞ்சாலைகளில் சுங்க வசூல் நிறுத்தம்

கொரோனா வைரஸால் நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருக்கும் சூழலில் அவசர சேவைகளுக்கு செல்லும் போது காத்திருக்க கூடாது என்பதற்க்காக நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலையில் இருக்கும் சுங்கச்சாவடிகளில் சுங்கக் கட்டணத்தை தற்காலிகமாக நிறுத்துவதாக மத்திய அரசு நேற்று அறிவித்துள்ளது

பயணிகள் ரயில் போக்குவரத்து, பஸ் போக்குவரத்து, தனியார் வாகனங்கள், சரக்கு லொறிப் போக்குவரத்து என அனைத்தும் தடுக்கப்பட்டுள்ளன. மக்கள் கூடுவதைத் தடுக்கும் வகையில் பல்வேறு கட்டுப்பாடுகளையும் மத்திய அரசு விதித்துள்ளது.

அதில் முக்கியமாக 21 நாட்களுக்கு நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார். ஊரடங்கு 2ஆவது நாளாகத் தொடர்கிறது. இதற்கிடையே அவசர சேவைகளுக்குச் செல்லும்போது தாமதம், தடை இருக்கக்கூடாது என்ற நோக்கில் சுங்கக்கட்டணம் வசூலிப்பை மத்திய நெடுஞ்சாலைத்துறை நேற்று நள்ளிரவு முதல் ரத்து செய்துள்ளது.

இது குறித்து மத்திய நெடுஞ்சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி நிருபர்களிடம் தெரிவித்தாவது: –

கொவிட் –19 வைரஸ் பாதிப்பால் அவசர சேவைகளுக்குச்செல்லும்போது சுங்கச்சாவடிகளில் நிற்கும்போது ஏற்படும் தாமதத்தைக் கருத்தில் கொண்டு, நாடு முழுவதும் சுங்கச்சாவடிகளில் கட்டணம் வசூலிப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

அவசர சேவைகளுக்கான அசௌகரியத்தைப் போக்குவது மட்டுமல்லாமல், நேரத்தையும் மிச்சப்படுத்தும். அதேசமயம் சாலைப் பராமரிப்பு, சுங்கச்சாவடிகளில் அவசர சேவை போன்றவை வழக்கம் போல் கிடைக்கும எனத் தெரிவித்தார்.

## இந்தியாவில் நோய் தொற்று பரவியோர் 649

இந்தியாவில் கொரோனா வைரசை கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், வைரசால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 649 ஆக உயர்ந்துள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 13ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. வைரஸ் வேகமாக பரவுவதால், நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பெரும்பாலான மக்கள் வீடுகளில் முடங்கி உள்ளனர்.

அதேநேரம் புதிய நோயாளிகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. இதுவரை கொரோனாவால் 649 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. 42 பேர் குணமடைந்துள்ளனர். அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 124 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 3 பேர் உயிரிழந்ததையடுத்து, இறப்பு எண்ணிக்கை 13 ஆக உயர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் கொரோனா வைரசுக்கு முதல் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஸ்ரீநகர் இதயநோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 65 நபர் உயிரிழந்துள்ளார். அவர் உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் உடல் பருமன் ஆகியவற்றால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்தவர்.

## அத்தியாவசிய பணியாளர்களுக்காக 200 பேருந்துகள் தினம் சேவையில்

சென்னையில் அத்தியாவசிய மற்றும் அவசர பணிகளில் ஈடுபடும் தாதியர்கள் மற்றும் ஊழியர்களுக்காக 200 மாநகர பேருந்துகள் நேற்று இயக்கப்பட்டன.

சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தின் மேலாண் இயக்குநர் கோ.கணேசன் இது தொடர்பில் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

அத்தியாவசிய பணிகளான மருத்துவம், பொது சுகாதாரம், குடிதண்ணீர், மின்சாரம், பால் விநியோகம் ஆகியவற்றில் பலர் பணியாற்றுக்கின்றனர். அரசின் முக்கிய துறைகளிலும்கூடக் குறைந்த அளவில் பணியாற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். எனவே அத்தியாவசிய மற்றும் அவசர பணிகளுக்கு அரசு போக்குவரத்து கழக பேருந்துகளை இயக்கவேண்டும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் உத்தரவிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில் சென்னை தலைமைச் செயலக அலுவலர்கள், பணியாளர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், தூய்மைப் பணியாளர்கள் ஆகியோர் தங்களது பணிக்கு வந்து செல்ல ஏதுவாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளான சிங்கப்பெருமாள் கோவில், கூடுவாஞ்சேரி, தாம்பரம், பூந்தமல்லி, மணலி, எண்ணூர், நெற்குன்றம், தேனாம்பேட்டை, துரைப்பாக்கம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து 200 மாநகர பேருந்து இயக்கப்பட்டன.

இத்தகைய அவசர பணிகளுக்கு மாநகர போக்குவரத்து கழகத்தின் சார்பில் போதிய டிரைவர்களும், கண்டக்டர்களும் தயார்நிலையில் உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார். இந்தப் பேருந்துகளில் மற்றவர்கள் பயணிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

# ஈஸ்டருக்கு முன் நல்ல செய்தியை ட்ரம் எதிர்பார்க்கையில் அமெரிக்காவில் எகிறுகிறது கொரோனா வைரஸ் பாதிப்பு

நியூயோர்க், மார்ச் 26

ஏப்ரல் 12ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்திற்கு முன்பாக கொரோனா தாக்கம் குறைந்து நாட்டின் பொருளாதாரம் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பும் என்று அமெரிக்க அதிபர் கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் இப்படித் தெரிவித்த மறுநாளே பல நூற்றுக்க ணக்கானவர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அதிபரின் கருத்துக்குப் பின்னர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மூன்றாம் இடத்திற்கு முன்னேறியிருக்கிறது அமெரிக்கா. இன்று மதியம் வரையில் அங்கு 68 ஆயிரத்து 489 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 394 பேர் மட்டுமே குணமாகியுள்ளனர். உயிரிழப்பும் ஆயிரத்து 32 ஆக உயர்ந்துள்ளது. ஆயிரத்து 455 பேரின் நிலை கவலைக்கிடமானதாக இருக்கின்றது.

நியூயோர்க் நகரில் பாதிப்பு மிகத் தீவிரமாக உள்ளது. அங்கு புதிதாக, 5 ஆயிரம் பேருக்கு வைரஸ் தொற்று இருப்பது உறுதியாகி உள்ளது. நியூயோர்க்கில் மட்டும் மரணமானோர் எண்ணிக்கை, 210. தொற்று உள்ளோர் எண்ணிக்கை, 25 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

நியூயார்க்கைச் சுற்றியுள்ள நியூ ஜெர்சி, கலிபோர்னியா, மிச்சிகன், இல்லினாய்ஸ், புளோரிடாவிலும், வைரஸ் பாதிப்பு அதிகமாக உள்ளது.

இதற்கிடையே நேற்றுமுன்தினம் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது, டிரம்ப் கூறியுள்ளதாவது: –

அனைத்து தரப்பு மக்களும், சமூக விலகலை முழுமையாகக் கடைப்பிடிக்கவேண்டும். அதிக அளவில் கூடுவதை தவிர்க்கவேண்டும். வைரஸ் பரவலைத் தடுக்கக் கூறப்படும் அறிவுரைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கவேண்டும். கண்ணுக்குத் தெரியாத எதிரியை வெல்வதற்கு அனைத்து தரப்பினரும் உதவவேண்டும்.

இதற்காக, ஓர் இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. வரும், ஏப்ரல், 12ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்திற்கு முன்பாக, நாடு இயல்பு நிலைக்குத் திரும்பவேண்டும். பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் இயல்புக்கு திரும்ப வேண்டும் என்று விரும்புகிறேன்.

அதை செயல்படுத்தி காட்டினால், மிகப் பெரிய வரலாற்று வெற்றியாக அது அமையும். அடுத்து வரும், மூன்று வாரங்கள், நமக்கு முக்கியமானதாகும் – இவ்வாறு, அவர் கூறினார்.

## இஸ்ரேல் சபாநாயகர் பதவி விலகல்

கடந்த வாரம் இஸ்ரேலில் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக அந்த நாட்டு நாடாளுமன்றக் கூட்டத் தொடரை சபாநாயகர் யுலி எடல்ஸ்டெய்ன் தள்ளி வைத்தார்.

இதற்கு எதிர்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. புதிய சபாநாயகர் தேர்வை தடுக்கவே நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முடித்து வைக்கப்பட்டதாக குற்றம் சாட்டின.

இது தொடர்பான வழக்கில் நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு இஸ்ரேல் உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இந்த உத்தரவை ஏற்க மறுத்து சபாநாயகர் யுலி எடல்ஸ்டெய்ன் நேற்று பதவி விலகினார்.

''மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரத்தில் நீதிமன்றம் தலையிடுவதை ஏற்க முடியாது'' என அவர் தெரிவித்துள்ளார்.

இவர் ஏழு ஆண்டுகள் சபாநாயகராகப் பதவி வகித்துள்ளார்.

## தீவிரவாதிகளின் திடீர் தாக்குதலில் சாட் படையினர் 92 பேர் மரணம்

அபூஜா, மார்ச் 26

ஆபிரிக்க நாடான சாட்டில் பொக்கோ ஹாரம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் அரச படையினர் 92 பேர் கொல்லப்பட்டனர்.

திங்கட்கிழமை இந்தத் தாக்குதல் நடந்தது. அந்தப் பகுதிக்கு நேரில் சென்ற அதிபர் இட்ரிஸ் டேபி இது ஜிகாதிகளின் கொலைவெறிச் செயல் என்றார்.

சாட், நைஜீரியா, நைகர் ஆகிய மூன்று நாடுகளின் எல்லைகளைச் சேர்ந்த பகுதியில் அமைந்துள்ள லேக் சாட் பகுதியில் உள்ள போமா தீவில் இராணுவ முகாம் மீது பொக்கோஹாரம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். சுமார் 7 மணி நேரம் இந்தத் தாக்குதல் நீடித்தது.

இதற்கு முன்னர் நைஜீரியப் படையினர் மீதும் அவர்கள் இதுபோன்ற பதுங்கித் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தனர். அதில் 42 நைஜீரியப் படையினர் கொல்லப்பட்டனர்.

லேக் சாட் பகுதியில் இருந்தே நைகர் மற்றும் செனகல் ஆறுகள் உற்பத்தியாகின்றன. வளமான தொல்லியல் சான்றாதாரங்கள் மிக்க இதன் பெரும் பகுதி சாட் நாட்டின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது.

பொக்கோஹாரம் தீவிரவாதிகள் நைஜீரியாவில் உருவாகி கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக செயற்பட்டு வருகின்றனர். பின்னர் படிப்படியாக அயல் நாடுகளிலும் பரவியுள்ளனர். இவர்களின் கிளர்ச்சியால் இதுவரை 36 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கின்றனர். 20 லட்சம் பேர் தமது வீடுகளைவிட்டு இடம்பெயர்ந்திருக்கின்றனர் என்று ஐ.நா. கூறுகின்றது.

அவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதற்கு சாட், நைஜீரியா, நைகர் ஆகிய மூன்று நாடுகளும் ஒருங்கிணைந்த இணைக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

''தாக்குதல்கள் நடந்த பல இடங்களுக்கு நான் அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றேன். ஆனால் ஒரே இடத்தில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் நாம் இழப்பைச் சந்தித்ததில்லை'' என்று தெரிவித்தார் அதிபர் டேபி.

## துப்பாக்கி வாங்க அலைமோதும் அமெரிக்கர்கள்

அமெரிக்காவில் கடந்த இரு வாரங்களில் துப்பாக்கி விற்பனை உச்சத்தை எட்டியுள்ளது. ஒக்லஹோமா மாகாணத்தில் ஒரு கடையில் மட்டும் துப்பாக்கி விற்பனை 800 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதர நாடுகளில் கொரோனா காரணமாக உணவுப்பொருள்கள் வாங்க மக்கள் முண்டியடிக்கின்றனர். அதற்கு நேர்மாறாக அமெரிக்க மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து துப்பாக்கிகளை வாங்கிச் செல்கின்றனர்.

கொரோனாவால் சமூக கலவரம் ஏற்படும் என அஞ்சி பாதுகாப்புக்காக மக்கள் துப்பாக்கிகளை வாங்குகின்றனர் என்று விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

## பங்களாதேஷில் காலிதா ஜியா விடுவிப்பு

பங்களாதேஷ் முன்னாள் பிரதமரும் எதிர்கட்சித் தலைவருமான கலிதா ஜியா நேற்று சில நிபந்தனைகளுடன் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

கொரோனா பிரச்சினையால் அவருக்கு ஆறு மாதங்கள் தற்காலிக விடுதலை வழங்கப்படுவதாக அரசு தெரிவித்துள்ளது.

ஊழல் குற்றச்சாட்டில் 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்ற கலிதா ஜியா 2018 பெப்ரவரி 8 முதல் சிறையில் உள்ளார்.

## நிற்காமல் ஓடுகிறது மரணம் 21 ஆயிரத்தை தாண்டியது

உலகமே கொலைக் கூடாரமாக மாற்றம்

கொவிட் – 19 எனப்படும் கொரோனா வைரசின் தாக்கத்தால் உலக நாடுகளில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை சடுதியாக எகிறி 21 ஆயிரத்தை தாண்டி வேகமாக நகர்ந்து வருகின்றது. இன்று நண்பகல் வரை 21 ஆயிரத்து 297 பேர் உயிரிழுந்தனர். 4 லட்சத்து 71 ஆயிரத்து 794 பேர் பாதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்டவர்களில் கால்வாசிப் பங்கினரான ஒரு லட்சத்து 14 ஆயிரம் பேர் மட்டுமே இதுவரையில் நோய்த் தொற்றிலிருந்து விடுபட்டுக் குணமடைந்துள்ளனர். சீனாவிலேயே அதிகளவானவர்கள் குணமடைந்துள்ளனர். அங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளானவர்களில் 90 சதவீதமானவர்கள் குணமடைந்துள்ளனர்.

இதற்கு நேரெதிராக ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளின் நிலை உள்ளது. பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் வேகத்திற்கு ஈராக குணமடைவோரின் எண்ணிக்கை அங்கு அதிகரிக்கவில்லை. உலகம் முழுவதும் 14 ஆயிரத்து 800 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புக்களே காணப்படுகின்றன.

196 நாடுகள் மற்றும் தன்னாட்சி நிலப் பரப்புக்களில் வைரஸ் தொற்று பரவியுள்ளது.

இத்தாலியில் ஆகக் கூடுதலாக 7 ஆயிரத்து 503 பேரும் ஸ்பெயினில் அடுத்தாக 3 ஆயிரத்து 647 பேரும் ஈரானில் 2 ஆயிரத்து 77 பேரும் உயிரிழந்திருக்கின்றனர்.

நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மொத்த நாட்டையும் முடக்குவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை அரசுகள் எடுத்து வந்தாலும் பல நாடுகளில் கொரோனா கட்டுக்குள் வருவதாகத் தெரியவில்லை.

நேற்று ஒரே நாளில் மட்டும் 17 ஆயிரம் பேருக்குப் புதிதாக நோய்த் தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளது.

## பாரிஸ் நகரில் திண்டாடும் பாலியல் தொழிலாளர்கள்

பிரான்ஸ் நாட்டில் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் வருவாய் இழந்த பாலியல் தொழிலாளர்கள் உத்தரவை மீறி சாலைகளில் வாடிக்கையாளர்களை அழைக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரான்ஸில் பாலுறவுக்கு அழைக்கும் ஆண்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. இதன் காரணமாகவும் வாடிக்கையாளர்கள் வருவதில்லை என புலம்பும் பாலியல் தொழிலாளர்கள், செலவுகளைச் சமாளிக்க வலைதளம் மூலம் நிதி திரட்டத் தொடங்கியுள்ளனர்.

## அரசமைப்புத் திருத்தத்துக்கான ரஷ்ய கருத்துக் கணிப்பு தாமதம்

கொரோனா அச்சத்தால் அதிபர் புடின் முடிவு

தான் தொடர்ந்தும் பதவியில் இருக்கும் வகையிலான அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வருவது தொடர்பில் மக்களின் கருத்தறியும் வாக்கெடுப்பை பிற்போடுவதாக அறிவித்திருக்கிறார் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின்.

ஏப்ரல் 22ஆம் திகதி நடக்கும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த இந்த வாக்கெடுப்பு கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பிறிதொரு திகதிக்குத் தள்ளி வைக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். எனினும் புதிய திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அதிபர் புடினுக்கு ஆதரவான இந்த அரசமைப்பு மாற்றங்கள் நாடாளுமன்றத்தாலும் அரசமைப்பு நீதிமன்றத்தாலும் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுவிட்டன. மக்கள் ஆதரவும் கிடைத்துவிட்டால் மேலும் இரு பதவிக் காலங்களுக்கு புடின் பதவியில் நீடிக்க முடியும். ஏற்கனவே நான்கு பதவிக் காலங்களுக்கு ஆட்சியில் இருந்துவிட்டார் புடினின்.

மீண்டும் தனது ஆட்சிக் காலத்தை நீடிப்பதற்கு புடின் எடுக்கும் முயற்சிகள் ''குற்றச் செயல்கள்'' என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னி.

ரஷ்ய அரசமைப்பின்படி அதிபர் ஒருவர் 6 ஆண்டுகள் பதவிக் காலத்திற்குரிய அதிபர் பதவியை தொடர்ந்து இரு தடவைகளுக்கு மேல் வகிக்க முடியாது. புடின் 201ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை ஒரு தடவையும் 2018ஆம் ஆண்டு முதல் இரண்டாவது தடவையும் பதவியில் நீடிக்கிறார்.

இப்போது மேலும் இரு பதவிக் காலங்களுக்குத் தான் பதவியில் நீடிக்க வழிவகுக்கக்கூடிய வகையில் அரசமைப்பைத் திருத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். கொரோனா வைரஸ் தாக்கத்தால் அந்த முயற்சிகள் தாமதப்பட்டுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# ‘முந்தியெமைக் காப்பதுவே முறை’




**உலகழிக்கப் புறப்பட்ட ஓர் சிறிய ‘வைரஸி’ன்
பலமழிக்கும் வகை அறியவேண்டும் நாம் – நிலமழிக்க
வந்ததுவாம் கிருமியதன் வாயதனுள் வீழாமல்
முந்தியெமைக் காப்பதுவே முறை.**

**காலை எழுந்தவுடன் கை, கால், முகம் கழுவி
மூலையிலே நூலோடு முடங்கிடுக – சாலையிலே
ஊர் சுற்றும் வேலையதை ஒதுக்கித்தான் வைத்திட்டால்
பார் மிரட்டும் நோயறுமாம் பார்!**

**காய்ச்சலது வந்தால் கடிதாக வைத்தியரை
பாய்ச்சலுடன் சென்றே நீர் பார்த்திடுக! – ஓச்சலிலா
வேலை மிகுதியிலும் விருப்போடு பணியாற்றி
ஊழதையும் தடுத்திடுவார் உணர்.**

**தும்மல், இருமல் தொடங்கிட்டால் உடனே நீர்
மும்மரமாய் வாய், நாசி மூடிடுக – தம்மனையில்
இருப்போர்க்கும் நோய்வருமாம் என்றதனால் நீவிரும்
வெறுப்பின்றி அதைச் செய்வீர் விரும்பி!**

**வீட்டால் வெளிக்கிட்டு வீதிதனில் போய்வந்தால்
தீட்டெனவே மனம் நினைந்து திரும்பியதும் – நாட்டமுடன்
கையதனை சோப்பாலே கழுவித் துடைத்ததன் பின்
பைய நுழைந்திடுவீர் பதிக்கு.**

**வெளிநாட்டு உறவென்று விருப்புடனே எவர் வரினும்
நலியாது வார்த்தைகளால் நயம் கூறி – தெளிவாக
முகம் மகிழ முகாமுக்குச் சென்று வர முன்மொழிந்து
அகமகிழ ஏற்பதுவே அறம்.**

**மூன்றடிக்குத் தூரமாய் முன்னின்று அன்போடு
நீண்ட உரையாடல் நிகழ்த்திடலாம் – வேண்டாது
அருகிருந்து பேசி அநியாய ’வைரஸை’
வருவிருந்தாய் ஆக்காதீர் வலிந்து!**

**வெள்ளைத் தோல் கண்டதுமே விருப்போடு வரவேற்கும்
பொல்லாத பழக்கத்தைப் போக்கிடுவீர் – வெல்லாத
நோய்க்கிருமி கொண்டிங்கு நுழைவராம் உம் உயிரை
மாய்க்க வழி காணாதீர் மகிழ்ந்து!**

**முகக் கவசம் போட்டதனால் முந்திவரும் கிருமிகளை
அகத்தினுளே நுழையாது அறுத்திடுக – சகத்தினிலே
மக்களது உயிர்பறிக்கும் மாண்பில்லாக் கிருமியினைத்
தக்கபடி வென்றிடுவீர் தனித்து!**

**அஞ்சாது ஆண்டவனின் அடியிணைகள் போற்றிடுக!
நெஞ்சார அவன் நாமம் நினைந்திடுக! – பஞ்சாக
வயிரசும் பறந்திடுமாம் வருவினைகள் நீங்கிடுமாம்
உயிரச்சம் ஒழிந்திடுமாம் உணர்!**

# நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு தளர்த்தப்படும் போது அர்த்தமற்றதாகும் அவலம்

## சலித்துக் கொள்கிறார் யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட்

நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கானது அது தளர்த்தப்படும் காலப் பகுதியில் அர்த்தமற்றதாகிவிடுகின்றது என யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தனது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியளாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தார். அவர் அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:–

ஊரடங்கு சட்டம் நேற்று முன்தினம் குறிப்பிட்ட நேரம் தளர்த்தப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆயிரக்கணக்கில் பொது மக்கள் யாழ் மத்தியில் ஒன்று கூடியிருந்தமையினை அவதானிக்க முடிந்ததது. இவ் வைரஸ் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு சட்டத்தின் முக்கிய நோக்கமான மக்கள் கூட்டாக ஒன்று கூடுவதை தடுக்கும் செயன்முறை ஊரடங்கு தளர்த்தப்பட்ட சந்தர்ப்பங்களில் வலுவற்றதாகிவிடுவதனை அவதானிக்க முடிந்தது.



அதாவது வைத்தியர்களால் இத்தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக முன்வைக்கப்படும் ஆலோசனைகளான தனிமைப்படுத்தல், கைகளை கழுவுதல், சுத்தமாக இருத்தல், இருநபர்களுக்கிடையில் குறிப்பிட்ட இடைவெளியை பேணுதல் என்பன ஊரடங்கு தளர்த்தப்படும் சந்தர்ப்பங்களில் மீறப்படுகின்றன.

ஒன்று கூடும் மக்கள் வைத்திய ஆலோசனைகளைப் பொருட்படுத்தாது பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மாத்திரமே அவதானம் செலுத்துகின்றனர். இது ஊரடங்கின் நோக்கத்தைச் சீர்குலைத்து விடுகின்றது.

எனவே ஊரடங்கு தளர்த்தல் என்பது குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளதுடன், மக்களின் தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்ய முடியும் என்பது தொடர்பிலும் புதிய முறைமை ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றதினதும் எல்லைப் பரப்பினுள் இலகுவாக மக்கள் தமக்கான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான முறைமைகளை ஏற்படுத்தி, நகர் பகுதியில் பலர் ஒன்று கூடுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

இதைக் கணக்கிலெடுக்காது விடுவோமாக இருந்தால் மக்கள் ஒன்று கூடுவதன் மூலம் ஏற்படும் பாரிய சிக்கல் நிலைகளை எம்மால் கட்டுப்படுத்த முடியாது போய் விடும்.

எனவேஇதுதொடர்பில்மக்கள்சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் பல்வேறு துறையிலும் உள்ளவர்களுடனும் வைத்தியர்களுடனும் கலந்துரையாடியிருக்கின்றேன். மக்கள் ஒன்று கூடும் சந்தர்ப்பங்களை குறைப்பதற்காக துறை சார்ந்தவர்களையும், வைத்தியர்களையும் உள்ளடக்கியதாக ஆளுநர் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்றை விரைவாக நடத்துவது தொடர்பில் முயற்சித்து வருகிறோம். அதில் கலந்துரையாடி கூட்டு அறிக்கை ஒன்றின் மூலம் பொது மக்களுக்கான சேவைகளை அவர்களின் உள்ளூராட்சி மன்ற எல்லைகளுக்குள் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை எவ்வாறு இலகுவான வழிமுறை ஒன்றின் மூலம் மேற்கொள்வது என்பது தொடர்பாகவும் –

மேலும் வடக்கின் எல்லைகள் மூடப்பட்டு எவ்வாறு பொது மக்கள் ஒன்று கூடும் வாய்ப்புகள் குறைக்கப்பட்டுள்ளனவோ அது போன்று ஊரடங்கு தளர்த்தப்படுகின்ற போது யாழ் மாநகர நகர்ப்பகுதியில் மக்கள் ஆயிரக்கணக்கில் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் வகையில் மாநகர எல்லைகளை மூடி, அத்தியாவசிய வைத்தியசாலை தேவைகள், மருத்துவ வசதிகளுக்கான அனுமதிகளை மாத்திரம் வழங்குவது தொடர்பாகவும் ஆளுநர் ஊடாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்வது தொடர்பாகவும் பரிசீலிக்கப்படும்.

இதற்கு சகல உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், அதன் நிர்வாகத்தினர் அனைவரும் தமது ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் எனவும் முதல்வர் கருத்து வெளியிட்டார்.

அத்துடன் ஊரடங்கு நிலமையின் போது கடற்றொழிலுக்காக வழங்கப்பட்டிருக்கின்ற அனுமதியும் ஊரடங்கின் நோக்கத்தினை முழுமை செய்வதிலிருந்து விலகிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. இவ் வைரஸ் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக முன்வைக்கப்பட்டிருக்கும் மருத்துவ ஆலோசனைகளை பின்பற்றாது, பாதுகாப்பு பிரிவின் மேற்பார்வை இன்றி மக்கள் ஒன்று கூடுவதற்கு அது வழிவகுப்பதாகவும், இது பின்னர் பாரிய சவாலாக அமையக் கூடும் எனவும் இது ஒரு பொருத்தமற்ற செயற்பாடு என்றும், இவ்வாறான செயற்பாடுகள் எமது வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதாரத் துறை சார்ந்தோர்களின் தனிமைப்படுத்தல் மற்றும் இந் நோய்த்தாக்கம் குறித்து ஆற்றுகின்ற சேவைக்கும், தியாகத்திற்கும் முற்றிலும் எதிரானதாக மாறிவிடுகின்றது என்றும், அவர்களின் தியாகங்களை அர்தமற்றதாக்கி விடுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். எனவே இது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# முல்லைத்தீவு மீனவர் வாழ்வாதாரத்தை சிதைத்து வருகிறது தனியார் நிறுவனம்!

## அந்தப் பிரதேச கடற்றொழிலாளர் குற்றச்சாட்டு







யாழ்ப்பாணம், மார்ச் 27

மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களை இராணுவத்தை ஏவி தனியார் நிறுவனம் ஒன்று தடுத்ததாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு சிலாவத்தை தியோகுநகர் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த பிரதேச மீனவர்களை இராணுவத்தினர் நேற்று தொழில் நடவடிக்கையில் ஈடுபடவிடாது தடுத்துள்ளனர்.

சிலாவத்தை தியோகுநகர் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் ஹோட்டல் ஒன்றினை அமைத்துவரும் கனடாவைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான தனியார் நிறுவனமே, இராணுவத்தை ஏவி தம்மை அச்சுறுத்தி தொழில் நடவடிக்கையை தடுத்ததாக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தனியார் நிறுவனம் அமைந்துள்ள கடற்கரைக்கு அண்மையாக கொரோனா பீதிக்குப் பின்னர் நீண்டநாட்களின் பின் நேற்றையதினம் கரைவலை மூலம் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த பிரதேச மீனவர்களை அப்பகுதியில் முகாம் அமைத்துள்ள படையினர் மீன்பிடியில் ஈடுபடவேண்டாம் எனத் தடுத்தனர்.

அத்தோடு, இப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட வேண்டும் என்றால் அந்தத் தனியார் நிறுவனத்தின் அனுமதி பெறவேண்டும் என்பது தமது முகாம் கட்டளை அதிகாரியின் உத்தரவு என்றும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

முன்னதாகத் தாம் தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை தனியார் நிறுவன அதிகாரி பிரதேச இராணுவ அதிகாரிக்கு அழைப்பு மேற்கொண்டு தமது நிறுவனம் அமைந்துள்ள கடற்கரைப் பகுதியில் மீன்பிடியை மேற்கொள்வதைத் தடுக்குமாறு கோரியதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, அப்பகுதிக்கு வருகைதந்த முல்லைத்தீவுப் பொலிஸார் மீனவர்களிடம் தொழில் செய்வதற்கான அனுமதிப் பத்திரம் போன்றவற்றைப் பார்வையிட்டுத் தொழிலில் ஈடுபடுவதை உறுதிப்படுத்தினர்.

இந்தப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களை இந்தத் தனியார் நிறுவனம் தமது பணி ஆட்களை ஏவி தாக்குதலை மேற்கொண்டு மீன்பிடியைத் தடுத்திருந்த நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் மீண்டும் மீனவர்கள் தொழிலில் ஈடுபடும் கரையோரங்களை ஆக்கிரமித்து வைத்துள்ள இந்த நிறுவனம் தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களை புகைப்படம் எடுப்பதும் இராணுவத்தை ஏவிக் கலைப்பதும் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றது.

தனியார் நிறுவனத்தில் பணி புரியும் மீனவர்களின் உறவினர்களான பெண்களிடம் தமது நிறுவனம் அமைந்துள்ள கடற்கைரையில் உங்கள் உறவினர்கள் மேற்கொண்டால பணியை விட்டு நிறுத்துவோம் என்றும் அச்சுறுத்தியுள்ளனர்.

தாம் தொடர்ந்தும் இந்தப் பகுதியில் தடையின்றி மீன்பிடியில் ஈடுபடுவதற்கு தனியார் நிறுவனத்தின் அடாவடியை நிறுத்தி தருமாறு மீனவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## தனித்திருப்போம் விழித்திருப்போம்!

நிலைபெறுமா றெண்ணிநிற்க
நீள் புவியில் விரும்பிடுவோம்
அலைபாயும் மனமதனை
அடக்குதற்கு துணிந்திடுவோம்
நிலையில்லா பொருளையெலாம்
நினைப்பினின்று அகற்றிடுவோம்
நெஞ்சமதில் இறைநினைப்பை
நிரந்தரமாய் இருத்திடுவோம் !

ஏகாந்தம் இனிதென்று
எப்போதோ இயம்பியதை
வாழ்நாளில் கடைப்பிடிக்க
வாய்க்கும் நிலை வந்திருக்கு
தனித்திருப்போம் விழித்திருப்போம்
தலையிடிகள் ஓடிவிடும்
நாமெடுக்கும் எச்சரிக்கை
நாட்டையுமே காத்திடுமே!

சுத்தமே சோறிடும்
என்பதனை மனமிருத்தி
நித்தமுமே சுத்தமதை
நிரந்தரமாய் ஆக்கிடுவோம்
பயங்கொள்ளல் ஆகாது
எனச்சொன்ன பாரதியை
உளங்கொண்டு செயற்பட்டால்
கலங்கல்நிலை தெளிவாகும்!

மஞ்சளது முக்கியத்தை
மனமமிப்போ உணர்கிறது
வேப்பிலையின் மகத்துவமும்
விரிவடைந்து போகிறது
துளசியிலை நீர்பருகல்
தூய்மையெனத் தெரிகிறது
பழமையினை ஒதுக்கியது
பிழையெனவே புரிகிறது!

கைகழுவல் எனும்வார்த்தை
கருத்திருத்தல் அவசியமே
மெய்தொட்டு தீண்டுதலை
விலக்கிவிடல் அவசியமே
வீட்டைவிட்டு வெளியேறா
இருப்பதுவும் அவசியமே
நாட்டுநிலை தனையெண்ணி
நடப்பதுநம் அவசியமே!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண், ஆஸ்திரேலியா




# கட்டைக்காடு மீனவர்களின் வலையில் சிக்கிய பெருந்தொகை பாரை மீன்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 26

நான்கு 4 நாட்களுக்கு பின்னர் கடற்றொழிலுக்குச் செல்ல அனுமதியளிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றுக் காலை கடற்றொழிலுக்குச் சென்றிருந்த கட்டைக்காடு மீனவர்களின் வலையில் சுமார் 4000 கிலோ பாரை மீன்கள் அகப்பட்டன. (ஐ)








# முல்லை. மக்களின் வீடுகளுக்கு நேரில் செல்லும் மருத்துவக் குழு

முல்லைத்தீவு, மார்ச் 26

முல்லைத்தீவு பிரதேச மக்களின் வீட்டுக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலை மருத்துவக் குழு சேவையாற்றி வருகின்றது.

முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி நிரோசினி திலீபன் தலைமையில் மருத்துவக் குழுவினர், மாதாந்த கிளினிக் பெறுவோரின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று, பரிசோதித்து மருந்துகளை வழங்கி வருகின்றனர். வைத்தியர் நிரோசினி, சிரேஷ்ட தாதியர் தர்மராசா சுகிந்தராசா உட்பட வைத்தியசாலையில் பணியாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் இந்தச் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

மருத்துவத்தேவையுள்ள ஏனைய நோயாளிகளுக்கும் மருந்துகளை இந்தக் குழுவினர் வழங்கினர்.

முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலையின் எல்லைக் குட்பட்ட உண்ணாப்பிலவு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு, வண்ணாங்குளம், மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு நகரம், கரைச்சிக்குடியிருப்பு, செல்வபுரம், முள்ளிவாய்க்கால் கிழக்கு ஆகிய கிராமங்களுக்கும் இந்த மருத்துவக் குழு சென்று மருத்துவச் சேவை வழங்கவுள்ளது. (ஐ)

# போலிப் பிரசாரங்களை உடனே கைவிடுங்கள்!

## பிரதமர் மஹிந்த கோரிக்கை



கொழும்பு, மார்ச் 26

அரசு வழங்கும் நிவாரணங்கள் தொடர்பான, போலிப் பிரச்சாரங்களை சமூக ஊடகங்கள் கைவிடவேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசு வழங்கும் நிவாரணங்கள் தொடர்பாக போலியான பிரசாரங்களை மேற்கொள்ளவேண்டாம் என அவர் சமூக ஊடகங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதுடன், மக்களுக்கு அத்தியாவசியமான நுகர்வுப் பொருள்களை வழங்குவதற்கு அரசு முன்னெடுத்துச் செல்லும் வேலைத் திட்டம் தொடர்பாக, போலியான தகவல்களை சமூகமயப் படுத்துவோருக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொறுப்பான அரசு என்ற வகையில் மக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சில தீர்மானங்கள் தொடர்பாகப் போலியான தகவல்கள் சமூக ஊடகங்கள் மூலம் பிரசாரம் செய்யப்படுவதன் காரணமாக, பிரதமர் மஹிந்த இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

அத்தியாவசிய நுகர்வுப் பொருள்கள் உள்ளடங்கிய நிவாரணங்களை மக்களுக்கு வழங்குவது உட்பட பிரதமர் மேற்கொண்டுள்ள தீர்மானங்களை வேண்டுமென்றே போலியான முறையில் சமூகமயப்படுத்தும் வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்படுவதாகத் தெரிகிறது.

கட்சி, நிற பேதமின்றி நாட்டு மக்கள் அனைவரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பத்தில் போலியான தகவல்களை சமூகமயப்படுத்தி அரசின் முயற்சியைக் குறை கூறுவதற்குப் பதிலாக, அரசின் இந்த வேலைத்திட்டத்தைச் சிறப்பாக முன்னெடுக்க உதவி வழங்குமாறு அரசு அனைத்து சமூக ஊடகங்களிடமும் கேட்டுள்ளது .(ஐ)

# உதவி கோரும் மக்கள்

வவுனியா, மார்ச் 26

வவுனியா - கற்குளிப் பகுதியில் ரயில் வீதிக்கு அருகாமையில் வசிக்கும் மக்கள் உதவி கோரியுள்ளனர்.

கூலித் தொழிலாளர் ஆகிய தங்களுக்கு நிவாரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என வவுனியா கற்குளிப் பகுதியில் ரயில் வீதிக்கு அருகாமையில் வசிக்கும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கொரோனா வைரஸின் அச்சம் காரணமாகவும், கொரோனா தொற்று பரவாமலிருப்பதற்காகவும் நாடளாவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், கூலித்தொழில் செய்து வாழ்ந்து வரும் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் கற்குளிப் பகுதியில் ரயில் பாதைக்கு அருகாமையில் வசித்து வரும் மக்கள் தங்களுக்கு நிவாரணங்களோ, உதவிகளோ கிடைக்கவில்லை எனக் கவலை வெளியிட்டுள்ளனர்.(ஐ)




காலைக்கதிர் Kalaikathir

பகிர்ந்துண்ணுதல்



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கானது

தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளை (27/03/2020) தலைப்பு
பகிர்ந்துண்ணுதல்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

- சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
- சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
- தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
- தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
- போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



## தொடர்ச்சியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் நாள்களில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படலாம் என எதிர்வு கூறப்படுவதால் மேலும் தொற்றுப் பரவாமல் இருக்க ஊரடங்கை நீடிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி உண்மையாயின் அது கடுமையாகக் கண்டிக்கப்படத்தக்கது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து கூட்டமைப்பின் டுவிட்டர் பக்கத்தில்,

பல இவ்வாறான வழக்குகள் முன்னெடுக்கப்படாத நிலையிலும் வேறு பலர் மேன்முறையீட்டில் விடுவிக்கப்பட்டபோதும் இந்த ஒருவர் தான் அவற்றுக்கு விதிவிலக்காக இருந்தவர். இலங்கையில் இவ்வாறான குற்றங்கள் தண்டிக்கப்படமாட்டா என்பதை இது உறுதி செய்கிறது-என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## தனிநபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்தித்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரச ஊழியர்களினதும் தனியார் துறை நிறைவேற்று அதிகாரம் அல்லாத ஊழியர்களினதும் சம்பளத்தில் கடன் தவணைக் கட்டணங்கள் அறவிடுவது 2020 மே மாதம் 30 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிதாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி இன்று காலையில் தெரிவித்துள்ளார்.

உலகை உலுக்கி வருகின்ற கொரோனோ தொற்று இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதில் தொற்றுக்கு இலக்காகியதாக யாழ்ப்பாணத்தில் ஒருவர் உட்பட நாடு முழுவதும் 102 போர் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

இந் நிலையில் தொற்றுச் சந்தேகத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் 32 பேர் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அனைவருக்கும் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்கள் அனைவரும் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதனால் தற்போது சந்தேகத்தின் அடிப்படையில் எவரும் வைத்தியசாலையில் இல்லை.

ஆயினும் கொரோனோ தொற்று அச்சம் நீக்கவில்லை. சந்தேகத்தின் பேரில் மேலும் சிலர் அனுமதிக்கப்படலாம். ஆகவே மக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டம் தவிர்ந்த கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் நாளை காலை மாலை 6 மணிக்கு நீக்கப்படும் ஊரடங்குச் சட்டம் மீண்டும் இரண்டு பிற்பகல் 2 மணிக்கு நடைமுறைக்கு வரும்.

இது குறித்து ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் -

புத்தளம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத் தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நாளை காலை 6 மணிக்கு நீக்கப்படுவதாக இருந்தது.

இருப்பினும் நிலவும் நிலைமையை கருத்தில் கொண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்.

புத்தளம் உட்பட ஏனைய ஐந்து மாவட்டங்களிலும் முன்னர் குறிப்பிட்டது போன்று நாளைகாலை மாலை6 மணிக்கு பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி இன்று தனது முகநூல் பதிவில், தற்போது கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் எவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவில்லை. இருப்பினும் தொற்றுக்கு உள்ளானவர்கள் எமது பகுதியில் இல்லை என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. ஆகவே எதிர்வரும் நாட்களில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் என சந்தேகத்திற்குள்ளானவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என எதிர்வு கூறப்படுகின்றது. ஆகவே பொதுமக்கள் மிகவும் அவதானமாக நடந்துகொள்ளவும் - எனப் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தின் பல இடங்களிலும் இராணுவம், பொலிஸாரால் தொற்று நீக்கும் நடவடிக்கைகளும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ-07)

## கொரோனாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு இன்று வியாழக்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன இதனைக் கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில் -

நாட்டின் அடுத்த இரண்டு வாரங்கள் சாவால் நிறைந்த காலமாகவே நாம் கருதுகின்றோம். இந்த இரண்டு வார காலத்தில் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். முடிந்தளவு தனிப்பட்ட முறையில் மக்கள் தம்மைப் பாதுகாத்துகொள்ள வேண்டும். வீடுகளுக்குள் பாதுகாப்பாக இருப்பதே இவ்வாறான சூழலில் மக்கள் தம்மை பாதுகாக்க முடிந்த சிறந்த செயற்பாடாகும். அதேபோல் சுகாதார துறையினர் எந்தவித தடைகளும் இல்லாது தமது சேவையை முன்னெடுக்க சுகாதார சேவையாளர்களுக்கு இடமளிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் அவர்களுக்குச் செய்து கொடுத்துள்ளது. மக்களின் பங்களிப்பும் இதில் அவசியம்.

மேலும் அடுத்த இரண்டு வாரகாலத்தில் கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புகள் இருக்கின்றன எனக் கருதுவதால் இப்போதே மருத்துவமனைகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில் அவர்களை சிரமப்படுத்தாத வகையில் அவர்களுக்கான மருத்துவ வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

அதேபோல்தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களும் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

மக்கள் எந்த விதத்திலும் அச்சம் கொள்ளத்தேவையில்லை. சுகாதார பணிப்பகம் மற்றும் அரசாங்கம் கூறும் ஆலோசனைகளை பின் பற்றி தம்மை பாதுகாப்பாக வைத்திருக்கும் நிலையில் வெகு விரைவில் நாட்டை எம்மால் இந்த சவால்களில் இருந்து விடுவித்துக்கொள்ள முடியும். அதற்காக்கலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். - எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## முகக்கவசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் முகக்கவசம் அணியும்படி அறிவுறுத்தப்படவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்று அவர் பதில் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் -

நோயாளர்கள், அவர்களின் நெருங்கிய நபர்கள், நோய்த் தொற்று வாய்ப்புள்ளவர்கள், நோய்த்தொற்றுக்குச் சிகிச்சையளிப்பவர்களே முகக்கவசம் அணிய வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அன்றாட வாழ்க்கையில் முகக்கவசங்களை அணிய வேண்டுமென சுகாதார அமைச்சு பரிந்துரைக்கவில்லை. முகக்கவசங்களை தவறாகப் பயன்படுத்துவதால் நோய் பரவுவதை அதிகரிக்கலாம். பயன்படுத்தப்படும் முகக்கவசங்களை பொது இடங்களில் வீசுவதன் மூலம் நோயின் பரவலை அதிகரிக்கலாம்.

இரண்டு நபர்களிடையே குறைந்தது 1 மீற்றர் இடைவெளியை வைத்திருப்பது, சவர்க்காரத்தால் 20 விநாடிகள் கைகளைக் கழுவுதல், கண்கள், மூக்கு மற்றும் வாயை அழுக்குக் கைகளால் தொடாமல் தவிர்ப்பது, தும்மும்போது முழங்கையின் உட்புறத்தினால் மூக்கு மற்றும் வாயை மூடுவது போன்றன நோய் பரவலை தடுக்கும் சிறந்த வழிகள்.

ஆரோக்கியமான நபருக்கு முகக்கவசங்களைப் பயன்படுத்துவதை சுகாதார அமைச்சு பரிந்துரைக்கவில்லை. என்றாலும், ஒரு நபர் அதைப் பயன்படுத்த விரும்பினால் முகக்கவசங்களைத் தேர்ந்தெடுப்பதில் சுகாதார அமைச்சு ஒருபோதும் தலையிடாது. இருப்பினும், இது ஒரு குற்றம் எனக் கருதி ஆரோக்கியமானவர்கள் முகக்கவசங்களைப் பயன்படுத்தவேண்டாம்.

ஆரோக்கியமான ஒருவர் முகக்கவசங்களை பயன்படுத்துவதற்கு எந்த அறிவியல் அடிப்படையும் இல்லை - என்றார். (ஐ)

## சுவிற்சர்லாந்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

சுவிஸ் செங்காளன் ஜோனா என்னும் பகுதியில் வெதுப்பகத்துக்கு மேலுள்ள குடியிருப்புத் தொகுதி ஒன்றில் 5 அறைகளில் ஒரு அறையில் தங்கியிருந்த இந்த நபர் ஒரு வாரத்துக்கு முன்னர் சூரிச் நகருக்குச் சென்று வந்துள்ளார்.

இந்நிலையிலேயே அவருக்கு கொரோனாவுக்கான ஆரம்ப அறிகுறிகள் தென்பட்டுள்ளன. அதையடுத்து வைத்தியசாலைக்கு தொடர்பு கொண்டபோது வைத்தியர்கள் அவருக்கு கொரோனா தொற்று இருப்பதை உறுதிப்படுத்தி வீட்டிலேயே 14 நாளகள் தனிமைப்படுத்துமாறு தெரிவித்திருக்கின்றனர்.

அதனையடுத்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த அவர் நேற்று மாலை ஆகியும் அவருடைய அறையில் எந்தவொரு சலனமுமின்றி இருந்ததால் பக்கத்து அறையில் இருந்தவர்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர். விரைந்து வந்த பொலிஸாரும் வைத்தியப் பிரிவினரும் அவர் இறந்துவிட்டார் என அறிவித்து அவரது சடலத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

லோகநாதனின் குடும்பத்தினர் புங்குடுதீவில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆனாலும் அவரின் சகோதரி ஒருவர் பேர்ண் பகுதியிலும், மருமகள் உறவுமுறையில் உள்ள ஒருவர் பிரான்ஸ் நாட்டிலும் வசித்து வருகின்றனர்.

லோகநாதன் நீரிழிவு நோயாளி எனவும் அவர் ஒரு சுவிஸ் உணவகத்தில் வேலை செய்து வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

லோகநாதனுக்கு அந்த நாட்டு மொழிப்பிரச்சினை உள்ளமையால் அவர் கொரோனா வைரஸ் தாக்குதலுக்குள்ளாகி இருக்கும் போது யாருடைய உதவியையும் நாடாது வைத்தியசாலையுடனும் தொடர்பு கொள்ள முடியாமல் தவிர்த்திருக்கலாம் எனப் பிரதேசவாசி மேலும் கூறினார்.

## கொலையாளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை செய்யப்பட்டார். அவர் இன்று பிற்பகல் சிறைச்சாலையிலிருந்து வீடு திரும்பினார்.

2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி, மிருசுவிலில் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற 8 பொதுமக்கள், இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு கழிப்பறைக் குழிக்குள் போடப்பட்டனர்.

அவர்களுடன் சென்ற மற்றொருவர் தப்பிச் சென்று வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில், சடலங்கள் மீட்கப்பட்டமையுடன், ஐந்து படையினருக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற ஆரம்ப விசாரணைகளின் அடிப்படையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

ட்ரயல் அட் பார் முறையில் நடந்த இந்த வழக்கில், 2015 ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் திகதி, ஸ்ராவ் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க என்ற இராணுவ அதிகாரிக்குத் தூக்குத் தண்டனை விதித்து, கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஏனைய நான்கு படையினரும் போதிய சாட்சிகளில்லை என விடுவிக்கப்பட்டனர்.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக, ஸ்ராவ் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ருந்தார்.

இந்த மனு முன்னர் பிரதம நீதியரசர் நளின் பெரேரா, நீதியரசர்கள் புவனேக அலுவிகார, சிசிர டி ஆப்ரூ, பிரியந்த ஜெய வர்த்தன, முர்து பெர்னான்டோ ஆகிய ஐந்து நீதியரசர்களைக் கொண்ட அமர்வினால் விசாரிக்கப்பட்டது.

இதையடுத்து குற்றவாளியான ஸ்ராவ் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு சரியானதே என்று உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்களும் 2019ஆம் ஆண்டு ஏப்ரலில் அறிவித்தனர்.

சம்பவத்தை நேரில் கண்ட மகேஸ்வரன் என்பவரின் தெளிவான சாட்சியங்களின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பை உறுதி செய்வதாக உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர், தூக்குத் தண்டனைக் கைதியான சுனில் ரத்நாயக்க விடுதலை செய்யப்பட்டர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும், அரசு அதனை மறுத்திருந்தது.

இந்த நிலையில் அவர் இன்று சிறையிலிருந்து வீடு திரும்பினார். (ஐ)

## நாடாளுமன்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின்போது இது தொடர்பில் பேசப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் குறைந்தபட்சம் பொதுத் தேர்தல் 3 மாதங்களுக்கு தள்ளிப் போகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தல் முன்னதாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடத்தப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் கொரோனா நிலைமையை அடுத்து, வேட்புமனுத் தாக்கலின் பின்னர் அது தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரால் காலவரையறையின்றி பிற்போடப்பட்டது.

மீளத் தேர்தல் இடம்பெறும் தினத்தைப் பின்னர் அறிவிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார். (ஐ)

## 4 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில்யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இன்று வியாழக்கிழமை காலை அந்தச் சிறுமி அவசரமாக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு கொரோனா சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான தாவடி நபரின் சகோதரியின் மகளே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் என்று தெரியவந்துள்ளது.

சிறுமி இன்று வியாழக்கிழமை நண்பகல் மருத்துவ அதிகாரிகள் மற்றும் இராணுவம், பொலிஸ் கண்காணிப்பில் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (ஐ-07)

# நாட்டில் 9 மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய இடங்களில் ஊரடங்கு தளர்வு

கொழும்பு,மார்ச்26

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்கள்உட்பட 9 மாவட்டங்களைத் தவிர்த்து, ஏனைய இடங்களில் இன்று காலை 6.00 மணி முதல் 2மணிவரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருந்தது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை ம்றறும் யாழ். மாவட்டங்களில், ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரும் வரை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் மற்றும் புத்தளத்தில் அமுலில் உள்ள ஊரடங்குச்சட்ட உத்தரவு நாளை காலை 6.00 மணிக்கு தளர்த்தப்பட்டு, பிற்பகல் 2 மணிக்கு அமுல்படுத்தப்படவுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் காலப்பகுதியில் நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் இடையிலான போக்குவரத்து முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப் பட்டாலும் அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் எவ்வித தடையும் இன்றி, தமது பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்கள், மரக்கறி, மீன், இறைச்சி மற்றும் மருந்து வகைகளை வாகனங்களில் ஏற்றிச் செல்லவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# நிவாரணப் பொருள்களுடன் தொற்று நீக்கிகளும் தேவை

## கோருகின்றார் அனந்தி



யாழ்ப்பாணம், மார்ச் 26

நிவாரணப் பொருள்களுடன், கிருமி தொற்று நீக்கும் பொருள்களையும் வழங்க வேண்டும் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறுவர்களை உள்ளடக்கிய குடும்பங்களுக்கு, நிவாரணப் பொருள்களைக் கையளிக்கின்ற போது, கிருமித் தொற்று நீக்கும் பொருட்களையும் அரசாங்கம் வழங்கவேண்டும் என ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவி அனந்தி சசிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய நெருக்கடியான காலகட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார். (ஐ)

# இருபாலை தெற்கு மக்களுக்கு உணவுப்பொருள் விநியோகம்









யாழ்ப்பாணம், மார்ச் 26

இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் சமைப்பதற்கு தேவையான உலர் உணவுப்பொருள்கள் இருபாலை தெற்குக் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டது.

இருபாலை தெற்கு ஜே - 257 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வதியும் மக்களில் நாளாந்த சமையல் செய்து சாப்பிடுவதற்கு அவதியுற்று வந்த குடும்பங்களில் சமுர்த்தி உத்தியோகத்தரினால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி குடும்பங்களுக்கு முதற் கட்டமாக உலர் உணவுப்பொருட்கள் இன்று வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் இ.லட்சுமிகாந்தன், இருபாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் பா.பிரதீபன்,வலி கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்,பிரதேச சபை உறுப்பினர் ந.கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்கினர். (ஐ - 07)

# காட்டுக்குள் விரட்டப்பட்ட வெளிநாட்டுத் தம்பதிகள்

கொழும்பு, மார்ச் 26

பண்டாரவளை, எல்ல பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றில் இருந்து வெளியேற்றப்பட்ட வெளிநாட்டுத் தம்பதி 4 நாள்களாகக் காட்டில் தங்கியிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளிநாட்டவர்களுக்கு இலங்கை ஹோட்டல்களில் தங்குவதற்கு உரிமையாளர்கள் அனுமதி வழங்க மறுத்து வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் வெளிநாட்டுத் தம்பதி ஒன்றுக்குத் தங்க இடம் இல்லாமல் போயுள்ளது. இதனால் காட்டுக்குள் சிறிய கூடாரம் ஒன்றை அமைத்து வசித்து வருகின்றனர்.

பின்னர் பொலிஸார் அவர்கள் தங்குவதற்குப் பொருத்தமான இடம் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்காண்டுள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து வருபவர்களால் இலங்கையில் கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவி வரும் நிலையில், விமான நிலையம் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# வடமராட்சி கிழக்கு மக்களுக்கு உலருணவுப் பொருள் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 26

வடமராட்சி கிழக்கில் ஊரடங்கு உத்தரவு காரணமாகப் பாதிக்கப்பட்ட நாளாந்த தொழிலில் ஈடுபடுவோரின் குடும்பங்களுக்கு உலர் உணவுகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட செயலகத்தால், மருதங்கேணிப் பிரதேச செயல கத்திற்குட்பட்ட பகுதிகளில் வறிய நிலையில் வசிக்கும் 300 குடும்பங்களுக்கு இவ்வாறு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு முள்ளியான் கிராம சேவகர் பிரிவிலிருந்து மணல்காடு வரையான 15 கிராம சேவகர் பிரிவுகளுக்கும் வழங் கப்பட்ட உலருணவுப் பொதிகளை இராணுவத்தினர் மக்களிடம் கையளித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட போதும், பருத்தித்துறை நகரத்துக்குச் சென்று, உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யமுடியாமையால், உணவின்றி வாடிய குடாரப்பு பகுதியைச் சேர்ந்த இரண்டு குடும் பங்களுக்கு பருத்தித்துறை பிர தேச சபை உறுப்பினர் வே.பிரசாந்தனும், உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்த மேலும் ஐந்து குடும்பங்களுக்கு தனியார் நிறுவனத்தினரும் உண வுப்பொருள்களை கையளித்திருந்தனர். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.03.2020 இல் வெளியிடப்பெற்றது.